# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2297/79 - 2022 සැප්තැම්බර් මස 16 වැනි සිකුරාදා - 2022.09.16

*2297/79 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 16 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

***1969 ஆம் ஆண்டின் முதலாம் இலக்கம் கொண்ட ஏற்றுமதி மற்றும் இறக்குமதி (கட்டுப்பாட்டு)ச் சட்டம்***

*1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கம் மற்றும் 1987ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கம் கொண்ட சட்டத்தின் மூலம் திருத்தப்பட்ட 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க ஏற்றுமதி மற்றும் இறக்குமதி (கட்டுப்பாட்டு)ச் சட்டத்தின் 4(1) மற்றும் 14 ஆவது பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 20 ஆவது பிரிவின் கீழ் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சராகிய ரணில் விக்கிரமசிங்ஹ ஆகிய என்னால் பின்வரும் விதிமுறைகள் ஒழுங்குப்படுத்தப்படுகின்றன.*

**ரணில் விக்கிரமசிங்ஹ,**
நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும்
தேசியக் கொள்கைகள் அமைச்சர்.

நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும்
தேசியக் கொள்கைகள் அமைச்சு,
கொழும்பு 01,
2022, செத்தெம்பர் 16.

**ஒழுங்கு விதிமுறைகள்**

1. இவ் ஒழுங்கு விதிகள் "**2022 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கம் கொண்ட கொடுப்பனவு முறைகளுக்கான இறக்குமதிக் கட்டுப்பாட்டு ஒழுங்கு விதிகள்**" என அழைக்கப்படும்.

2. திருத்தஞ் செய்யப்பட்ட, 2022 ஆம் ஆண்டு மே மாதம் 06 ஆந் திகதி கொண்ட 2278/21 ஆம் இலக்கம் கொண்ட அதிவிஷேட வர்த்தமானி அறிவித்தல் பிரகடனப்படுத்தப்பட்ட 2022 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்கம் கொண்ட கொடுப்பனவு முறைகளுக்கான இறக்குமதிக் கட்டுப்பாட்டு ஒழுங்கு விதிகள், இதன் மூலம் மேலும் திருத்தி அமைக்கப்படுகின்றன.


1A - PG 5981 — 406 (2022/09)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

3. 2022 ஆம் ஆண்டு யூன் மாதம் 24 ஆந் திகதிய 2285/19 ஆம் இலக்கம் கொண்ட அதி விஷேட வர்த்தமானி அறிவித்தலில் பிரகடனப்படுத்தப்பட்ட 2022 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்கம் கொண்ட கொடுப்பனவு முறைகளுக்கான இறக்குமதிக் கட்டுப்பாட்டு ஒழுங்கு விதிகள் மூலம், திருத்தம் செய்யப்பட்ட, 2022 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்கம் கொண்ட கொடுப்பனவு முறைகளுக்கான இறக்குமதிக் கட்டுப்பாட்டு ஒழுங்கு விதிகளில் 04 (ஈ) ஒழுங்கு விதியின் பிரகாரம் வியாபார மற்றும் வர்த்தக உணவுப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரின் சிபாரிசின் பேரில் இறக்குமதி செய்யப்பட்ட அத்தியவசிய உணவுப் பொருட்கள், துறைமுகத்திற்கு / விமான நிலையத்திற்கு வருகின்ற திகதி, கீழ்க் காணப்படும் விதத்தில் நீடிக்கப்படுகின்றது.

i. திருத்தம் செய்யப்பட்ட 2022 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்கம் கொண்ட கொடுப்பனவு ஒழுங்குகள் தொடர்பான இறக்குமதிக் கட்டுப்பாட்டு ஒழுங்கு விதிகளில் **I ஆவது அட்டவணையில் 0402.21.00 மற்றும் 0713.40.11 போன்ற இயைபு முறைக் குறியீட்டின்** கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பொருட்கள், அப்பொருட்கள் 2022 ஆம் ஆண்டின் ஒற்றோபர் மாதம் 31 ஆந் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் இலங்கைத் துறைமுகத்திற்கு அல்லது விமான நிலையத்தினை வந்தடையும் பொருட்களை பெற்றுக் கொள்ளப்பட்ட வியாபார, வர்த்தக மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரின் சிபாரிசின் கீழ், திறந்த கணக்கு /சரக்கு கணக்கு அடிப்படையில் கொடுப்பனவு முறைமையின் கீழ் இறக்குமதி செய்வதற்கான அனுமதி வழங்கப்படும்.

ii. மேலே 3(i)இல் குறிப்பிடப்பட்ட பொருட்கள் தவிர அதன் ஒழுங்கு விதிகளில் **I ஆவது உப அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பொருட்கள்,** அப்பொருட்கள் 2022 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 30 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் இலங்கைத் துறைமுகத்திற்கு அல்லது விமான நிலையத்தினை வந்தடையும் பொருட்களை பெற்றுக் கொள்ளப்பட்ட வியாபார, வர்த்தக மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரின் சிபாரிசின் கீழ், திறந்த கணக்கு /சரக்கு கணக்கு அடிப்படையில் கொடுப்பனவு முறைமையின் கீழ் இறக்குமதி செய்வதற்கான அனுமதி வழங்கப்படும்.

4. திருத்தம் செய்யப்பட்ட 2022 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்கம் கொண்ட கொடுப்பனவு ஒழுங்குகள் தொடர்பான இறக்குமதிக் கட்டுப்பாட்டு ஒழுங்கு விதிகளில் **I ஆவது அட்டவணையில் 0402.21.00 மற்றும் 0713.40.11 போன்ற இயைபு முறைக் குறியீட்டின்** கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பொருட்கள், திருத்தம் செய்யப்பட்ட, 2022 ஆம் ஆண்டு மே மாதம் 06 ஆம் திகதி கொண்ட இலக்கம் 2278/21 ஆம் இலக்கம் கொண்ட அதிவிஷேட வர்த்தமானப் பத்திரிகையின் மூலம் பிரசுரிக்கப்பட்ட இறக்குமதி 2022 ஆம் ஆண்டி 07 ஆம் இலக்கம் கொண்ட கொடுப்பனவு ஒழுங்குகள் தொடர்பான இறக்குமதிக் கட்டுப்பாட்டு ஒழுங்கு விதிகளில் 06 ஆவது ஒழுங்கு விதியில் இருந்து விடுவிக்கப்படுகின்றது.

5. பதிவு செய்யப்பட்ட கோழி உணவுப் பொருட்கள் உற்பத்தியாளர்களுக்கு கோழி உற்பத்திக்காக அவசியமான **சோளம் (இயைபு முறைக் குறையீடு 1005.90.00) மற்றும் சோயா உணவுகள் (இயைபு முறைக் குறையீடு 2304.00.00)** அப்பொருட்கள் 2022 ஆம் ஆண்டு ஒற்றோபர் 31 ஆந் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் இலங்கைத் துறைமுகத்திற்கு அல்லது விமான நிலையத்தினை வந்தடையும் பொருட்களை பெற்றுக் கொள்ளப்பட்ட விவசாய விடயத்திற்கு பொறுப்பு அமைச்சின் செயலாளரின் சிபாரிசின் கீழ், திறந்த கணக்கு /சரக்கு கணக்கு அடிப்படையில் கொடுப்பனவு முறைமையின் கீழ் இறக்குமதி செய்வதற்கான அனுமதி வழங்கப்படும்.

6. மேலே 3 ஆம் இலக்கம் கொண்ட ஒழுங்க விதியினை மோசடி செய்கின்ற எந்தவொரு நிறுவனம் தொடர்பாகவும் வியாபார மற்றும் வர்த்தக உணவுப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரின் மற்றும் மேலே ஒழுங்கு விதி இலக்கம் 05 இனை மோசடி செய்கின்ற எந்தவொரு இறக்குமதி தொடர்பாகவும் விவசாய விடயப் பொறுப்பு அமைச்சின் செயலாளரின் ஆலோசனைகளை இலங்கை சுங்கப் பணிப்பாளர் பெற்றுக் கொள்ள வேண்டும்.

EOG 09 - 0406

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.